

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இரயில் மார்க்கமாக சிதம்பரம் வந்தடைந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (14.7.2025) பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செய்ய விரும்பிய

# ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவுக்கு வீட்டுச் சிறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜூலை 15-

ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா அவர்கள் 1931-ஆம் ஆண்டு போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த விரும்பினார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, சுவர் ஏறிக் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இதனை அனைத்து ஜனநாயகக் குரல்களும் ஓரணியில் கண்டித்தாக வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஜம்மு - காஷ்மீரின் மாநிலத் தகுதி மீண்டும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், இன்று அரங்கேறியுள்ள நிகழ்வுகள் அங்கே எந்தளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது என்பதன் கொடூர நினைவூட்டலாக அமைந்துள்ளன.**

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரான உமர் அப்துல்லா அவர்கள் 1931ஆம் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த விரும்பினார் என்ற ஒரே காரணத்துக்காக அவர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, சுவர் ஏறிக் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சரை இப்படியா நடத்துவது?**

**இது ஏதோ ஒரு மாநிலம் அல்லது ஒரு தலைவரைப் பற்றியது மட்டும் என்று பார்க்க முடியாது! தமிழ்நாடு தொடங்கி காஷ்மீர் வரை ஒன்றிய பா.ஜ.க. அரசானது தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் உரிமைகளைத் திட்டமிட்டுப் பறிக்கிறது.**

**இன்று காஷ்மீரில் நடப்பது எங்கு வேண்டுமானாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தத் தலைவருக்கும் நடக்கலாம். அனைத்து ஜனநாயகக் குரல்களும் இதனை ஓரணியில் கண்டித்தாக வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று (14.7.2025) ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி , மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் , சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் உட்பட பலர் உள்ளனர்.

## கரூர் மாவட்டம்

## கரூர் மாநகரம் கரூர் வடக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கரூர் மாவட்டம், கரூர் மாநகரம் , கரூர் வடக்கு பகுதிச் செயலாளர் கரூர் கணேசன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எம்.பாண்டியன்** (8. கொங்கு நகர், அண்ணா சாலை, வெங்கமேடு அஞ்சல், கரூர் மாவட்டம் - 639 006 ) அவர்கள் கரூர் வடக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 14.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும், திராவிட மாடல் நல்லாட்சி தொடரவும், 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்டபட்ட பகுதியில் ஆய்வு செய்தார். உடன் வட்டச் செயலாளர்கள் கோபி, விஜயகுமார் ஆகியோர் உள்ளனர்.

# கொளத்தூர் தொகுதி தனியார் உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து:

## பாதிக்கப்பட்டவர்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சந்தித்து ஆறுதல்!



*சென்னை, ஜூலை 15 -*

*சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 13- 07- 2025 அன்று மதியம் 3 மணி அளவில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி யில் NO :50/79 எஸ் ஆர் பி கோயில் தெருவில் அமைந்துள்ள Team fibre fitness studio என்ற உடற்பயிற்சி கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்து இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டு அதில் தீக்காயம் அடைந்தவர்களான அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சந்தோஷ் என்பவரையும்,*

*மற்றும் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கேசவன்ஆரிப் என்ற இருவரையும் பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்பட்டது.*

*மற்றும் இவ்விபத்தில் தீக்காயம் ஏற்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்று வரும் 1 அல்லினோ வயது 24 , தந்தை பெயர் ரிச்சர்ட் நம்பர், 12 /34 சுந்தர விநாயகர் கோவில் தெரு, பெரம்பூர் சென்னை*

*முகமது சுல்தான் ( வயது 47) தந்தை பெயர் முகமது ஹாரிப், எண் 36/4 திமஸ் சாமி தர்கா திரு பெரம்பூர் சென்னை 11*

*3 ராகுல் ( வயது 23) தந்தை பெயர் லோகநாதன் எண்:38 வேலவன் நகர் கொளத்தூர் சென்னை 99 ஆகிய மூன்று நபர்களை நேரடியாக அவர்கள் இல்லம் சென்று நலம் விசாரித்தார்.*

## கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

## சங்கராபுரம் கிழக்கு, சங்கராபுரம் மேற்கு, சங்கராபுரம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.ஆறுமுகம் அவர்கள் வயது மூப்பின் காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் சங்கராபுரம் கிழக்கு, சங்கராபுரம் மேற்கு, சங்கராபுரம் தெற்கு ஆகிய 3 ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர் கொண்டதாக அமைவதோடு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட சங்கராபுரம் கிழக்கு, சங்கராபுரம் மேற்கு, சங்கராபுரம் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் அமையும்.

சங்கராபுரம் கிழக்கு ஒன்றியம் : 1.சு.குளத்தூர், 2. ஆரூர், 3.வரகூர், 4.விரியூர், 5..மூக்கனூர், 6.புத்தி ராம்பட்டு, 7.கிடங்குடையாம்பட்டு ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், சங்கராபுரம் வடக்கு ஒன்றியத்தில் உள்ள மல்லாபுரம் கிளைக் கழகம் மட்டும்.

சங்கராபுரம் மேற்கு ஒன்றியம் : 1. தேவபாண்டலம், 2.அ.பாண்டலம், 3.தியாகராஜபுரம், 4.எஸ்.வி.பாளையம், 5.ஊராங்கனி, 6.அரசம்பட்டு, 7.பூட்டை, 8.செம்பராம்பட்டு, 9.பொய்குணம், 10.ச.செல்லம்படடு, 11.கொசப்பாடி ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் சங்கராபுரம் பேரூர்.

சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் : 1.வடசிறுவள்ளூர், 2. ராமராஜபுரம், 3.வடசெட்டியந்தல், 4.மஞ்சபுத்தூர், 5.கீழப்பட்டு, 6.மேலப்பட்டு, 7.மூரார்பாளையம், 8.சோழப்பட்டு, 9.சேஷசமுத்திரம, 10.நெடுமானூர், 11.பழையனூர், 12.வளையாம்பட்டு ஆகிய 12 ஊராட்சிகள்.

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற சங்கராபுரம் கிழக்கு, சங்கராபுரம் மேற்கு, சங்கராபுரம் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சங்கராபுரம் கிழக்கு ஒன்றியம் :**
பொறுப்பாளர் : இரா. செல்வம்
வடக்கு தெரு, சு.குளத்தூர்,
சங்கராபுரம் வட்டம், கள்ளக்
குறிச்சி மாவட்டம்

**சங்கராபுரம் மேற்கு ஒன்றியம் :**
பொறுப்பாளர் : ஆ.கதிரவன், பி.இ.,
1/224, நடுத்தெரு, தேவ பாண்டலம்,
சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி
மாவட்டம்

**சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் :**
பொறுப்பாளர் : ந. பன்னீர்செல்வம்
வடசிறுவள்ளூர், தேவபாண்டலம்
அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி
மாவட்டம்

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 14.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. மருத்துவ அணி இணைச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. மருத்துவ அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த டாக்டர் அ.சுபேர்கான் அவர்கள் சிறுபான்மை நலஉரிமை பிரிவு செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, மருத்துவ அணி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு. **ஆர்.அண்ணாமலை** அவர்கள், **மருத்துவ அணி இணைச் செயலாளராகவும்;**

டாக்டர் இரா.லட்சுமணன் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராகவும் திரு. அண்ணாமலை அவர்கள் இணைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டதால், அவர்களுக்குப் பதிலாக, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்களான **மருத்துவர் விவேக்** (ஈரோடு தெற்கு மாவட்டம்), **மருத்துவர் கிருத்திகா** (காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்) ஆகியோர் **தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளர்களாகவும்** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில மருத்துவ அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர்கள் கழகப் பணியாற்றுவார்கள்.

**``அண்ணா அறிவாலயம்''**
**சென்னை 600 018,**
**நாள் : 14-7- 2025.**

**துரைமுருகன்,**
**பொதுச் செயலாளர்**
**தி.மு.க.**

## ராஜேஷ் அட்வகேட் அசோசியேட்ஸ் ஏற்பாட்டில்

# எழும்பூரில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா - கிரிக்கெட் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார்!

*சென்னை, ஜூலை 15-*

*தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கர்ம வீரர் காமராசர் அவர்களின் 123 வது பிறந்த நாளை முன்னிட்டு, ராஜேஷ் அட்வகேட் அசோசியேட்ஸ் (Rajesh Advocate Associates) குழுமம் சார்பில் வழக்கறிஞர்களுக்கான சிறப்பு கிரிக்கெட் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கீழ்ப்பாக்கத்திலுள்ள சி.எஸ்.ஐ. பெயின் பள்ளி வளாக விளையாட்டுத் திடலில் 12.07.2025, சனிக்கிழமை அன்று நடைபெற்றது.*

*வழக்கறிஞர்களுக்காக பிரத்யேகமாக நடத்தப்பட்ட இக்கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் சென்னை உயர்நீதி மன்ற பார் கவுன்சில், ஜார்ஜ் டவுன் மெட்ரோபாலிடன் மாஜிஸ்டிரேட் கோர்ட் பார் கவுன்சில், ஜார்ஜ் டவுன் கிரிமினல் கோர்ட் பார் கவுன்சில், ஜார்ஜ் டவுன் சிவில் கோர்ட் பார் கவுன்சில், எக்மோர் பார் அசோசியேஷன், திருவொற்றியூர் பார் அசோசியேஷன், பூந்தமல்லி கிரிமினல் கோர்ட் பார் கவுன்சில், பூந்தமல்லி சிவில் கோர்ட் பார் கவுன்சில், ஸ்ரீபெரும்புதூர் பார் அசோசியேஷன், திருவள்ளூர் பார் அசோசியேஷன் உள்ளிட்ட பார் கவுன்சில்களைச் சேர்ந்த 12 அணிகள் பங்கு பெற்றன.*

*கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் இப்பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, இப்போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்த திருவொற்றியூர் பார் அசோசியேஷனைச் சேர்ந்த அணிக்கு கோப்பைகள், பதக்கங்கள், பரிசுத் தொகையினை வழங்கினார்.*

*தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் முன்னாள் தலைவர் வழக்கறிஞர் ஆர்.சி.பால் கனகராஜ் இரண்டாம் இடம் பிடித்த ஜார்ஜ் டவுன் கோர்ட் பார் அசோசியேஷனைச் சேர்ந்த அணிக்குப் பரிசுகளை வழங்கினார்.*

*இப்பரிசளிப்பு நிகழ்விற்கு வழக்கறிஞர் ராஜேஷ் தலைமை தாங்கினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநிலத் துணைச் செயலாளர் கே.சிரஞ்சீவி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் சுமதி அன்பரசு, 58வது வட்ட காங்கிரஸ் கட்சி சர்க்கிள் தலைவர் சிவாலயா ஏ. ஜாபர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*தமிழ்நாடுபுதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ். அமுல்ராஜ், தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் கே.சந்திரமோகன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் சங்கச் செயலாளர் ஆர்.கிருஷ்ணகுமார் மற்றும் எழும்பூர் தொகுதி, ஆகியோர் இப்பரிசளிப்பு விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.*

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

## மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) ஆலோசனைக் கூட்டம் வருகிற 26.07.2025 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மேற்கூறிய பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப் பயிற்சிக் கூட்டத்தில் வருகைப் பதிவேடு வைக்கப்பட இருப்பதால் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 14.7.2025

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை.